

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மேற்கு பகுதி தி.மு.கழக சார்பில் பகுதிச் செயலாளர் எஸ்.இந்திரன் தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, பகுதி செயலாளர்கள் டி.காமராஜ், த.ஜெயக்குமார் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### "உயர்வுக்குப் படி" திட்டத்தின் மூலம்

# மாணவர்கள் செப். 23ஆம் தேதி வரை கல்லூரிகளில் சேரலாம்!

## அமைச்சர் க.பொன்முடி பேட்டி!

சென்னை, செப். 13 -

சென்னை, காமராஜர் சாலையில் உயர்கல்வித் துறை அதிகாரிகளுடன் அமைச்சர் முனைவர் க. பொன்முடி உயர்கல்வித் துறைக்குட்பட்ட பல்கலை. பதிவாளர்களுடனும் ஆலோசனை நடத்தினார்.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் க.பொன்முடி,

நடப்பாண்டு பொறியியல் படிப்பில் மாணவர் சேர்க்கை அதிகரித்திருப்பதாகவும், கூடுதலாக 15 ஆயிரம் மாணவர்கள் பொறியியல் படிப்பில் சேர்ந்துள்ளதாக அவர் கூறினார்.

உயர்கல்வித் துறைத் தலைவர்கள் மற்றும் உயர் கல்வித் துறைக்குட்பட்ட பல்கலைக்கழகங்களின் பதிவாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம், சென்னை காமராஜர் சாலையில் உள்ள தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.



இதில் உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி கலந்து கொண்டு, 2021-22 முதல் 2024-25 வரையிலான உயர்கல்வித் துறை தொடர்பான அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர், நடப்பாண்டு பொறியியல் படிப்பில் கூடுதலாக 15 ஆயிரம் மாணவர்கள் சேர்ந்துள்ளதாக தெரிவித்தார். "உயர்வுக்கு படி" திட்டத்தின் மூலமாக இந்த மாதம் 23ம் தேதி வரை "வராண்டா அட்மிஷன்" மூலமாக மாணவர்கள் கல்லூரிகளில் சேரலாம் என்றும் அமைச்சர் கூறினார்.

### அதிக வரி செலுத்தும் மாநிலங்களுக்கு

# நிதிப் பகிர்வை 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டும்!

## தமிழ்நாடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு உள்ளிட்ட மாநில நிதியமைச்சர்கள் பங்கேற்ற திருவனந்தபுரம் கூட்டத்தில் வலியுறுத்தல்!

திருவனந்தபுரம், செப்.13 -

நிதிப் பகிர்வில் தொடர்ந்து பாரபட்சம் காட்டும் ஒன்றிய பா.ஜ.க., அரசுக்கு திருவனந்த புரத்தில் நடைபெற்ற மாநில நிதி யமைச்சர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் அதிக வரி செலுத்தும் மாநிலங்களுக்கு நிதி பகிர்வை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று ஒன்றிய அரசுக்கு கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் வலியுறுத்தினார்.

மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு நிதி பாகுபாடு காட்டுவது குறித்தும், நிதி புறக்கணிப்பு செய்வது தொடர்பாகவும் கேரளாவில் பா.ஜ.க., ஆட்சி அல்லாத மாநிலங்களின் நிதியமைச்சர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. திருவனந்தபுரத்தில் நடைபெற்ற இந்த கூட்டத்தை கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, கர்நாடகா வருவாய்த்துறை அமைச்சர் கிருஷ்ணா பைரே கவுடா, தெலுங்கானா துணை முதலமைச்சர் மற்றும் நிதி அமைச்சர் மல்லு பட்டி விக்ரமார்கா, பஞ்சாப் நிதி அமைச்சர் ஹர்பால் சிங் சீமா ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து 16 வது நிதி கமிஷனுக்கு அறிக்கை அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.


இக்கூட்டத்தில் பேசிய கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், நாட்டின் கூட்டாட்சி பாதிக்கப்பட்டுள்ளது என்றும் மாநிலங்கள் பல்வேறு சவால்களை சந்திக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

அரசியல் சாசன உரிமைகளையும், உரிய நிதியையும் பெற நீதிமன்றங்களை நாட வேண்டியுள்ளதாகவும் அவர் கூறினார். மாநிலங்களுக்கான நிதி பகிர்வை ஒன்றிய அரசு 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### லேணா (எ) இரா. இலக்குமணன்

**செப்டம்பர் 13 (1998)**



**கழகம் தொடங்கிய காலந்தொட்டு உறுப்பினராகி, சுமார் நாற்பது ஆண்டு காலமாக தனது பகுதியில் கழக வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர்.**

**திருத்துறைப்பூண்டி ஒன்றியக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக ஒரு முறையும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் பங்கேற்றதோடு, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று ஆறு மாத சிறைவாசம் அனுபவித்தார். 'மொழிப்போர்த் தியாகி' என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னை, தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழக கூட்டரங்கில் 11.09.2024 அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் கலை பண்பாட்டு மற்றும் அருங்காட்சியங்கள் துறைகளின் சார்பில் வெளியிடப்பட்ட அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அருங்காட்சியங்கள் துறை ஆணையர் திருமதி கவிதா ராமு, டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் சீ.சௌம்யா, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், கலை பண்பாட்டுத் துறை இயக்குநர் சே.ரா.காந்தி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

### செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்ப வசதிகளுடன் – நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில்

# கழக முப்பெரும் விழா - பவள விழா ஏற்பாடுகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி !

சென்னை, செப். 13 -

அயராது உழைக்கும் கழகத் தலைவரின் எண்ணங்கள் வெற்றிபெறும் வகையில் முப்பெரும் விழாவும், பவள விழாவும் அமையும் செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்ப வசதிகளுடன் சைதையில் நடைபெறும் முப்பெரும் விழாவும், பவள விழாவும் அமையும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாவுத்துறை அமைச்சர் - சென்னை தெற்கு மாவட்ட தி.மு.கழக செயலாளர் திரு. மா.சுப்பிரமணியன் சென்னை ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் செப்.17 அன்று முப்பெரும் விழா மற்றும் தி.மு.கழகத்தின் பவள விழாவும் நடைபெறுவதையொட்டி செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது:

நந்தனம் ஒய்.எம்.சி.ஏ மைதானத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முப்பெரும் விழாவும், திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி அதன் பவள விழாவும் நடைபெற இருக்கிறது. முதல்வர் அவர்கள் தலைமையில், இந்த விழாவில் விருதாளர்களுக்கு விருதுகளை வழங்கி சிறப்புரையாற்ற விருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாற்றில் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் திங்களில் முப்பெரும் விழாக்கள் காலங்காலமாக நடத்தப்பட்டு வருகிறது.

அந்த வகையில் அய்யா தந்தை பெரியார் பிறந்தநாளும், பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் பிறந்தநாளும், திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கிய நாள் ஆகியவற்றை முப்பெரும் விழா என்ற பெயரில் மிகச் சிறப்பாக ஆண்டுதோறும் விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. இந்தாண்டு இன்னும் கூடுதல் சிறப்புடன் திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவடைவதையொட்டி பவள விழாவும் கொண்டாடப்பட இருக்கிறது.

நந்தனம் ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தைப் பொறுத்தவரை ஏற்கெனவே வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடத்தப்பட்டு மிகப் பெரிய அளவிலான வெற்றியைப் பெற்றிருக்கிறது. இதே மைதானத்தில்தான் 2017ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்தப் பிள்ளை என்று கொண்டாடப்படுகின்ற முரசொலிக்கு பவள விழா நடத்தப்பட்டது.

2018ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மறைவையொட்டி அவரது நினைவைப் போற்றும் விதமாக தேசியத் தலைவர்கள் பங்கேற்ற பிரம்மாண்டமான நினைவேந்தல் நிகழ்ச்சி இந்த மைதானத்தில் நடைபெற்றது. 2019ஆம் ஆண்டு புதுவை உள்ளிட்ட தமிழகத்தின் 40 பாராளுமன்றத் தொகுதிகளில், 39 தொகுதிகளில் பிரம்மாண்டமான வெற்றியைப் பெற்றும், சட்டமன்ற இடைத்தேர்தல்களில் வெற்றியினைப் பெற்றும், அந்த வெற்றியைக் கொண்டாடுகின்ற வகையிலேயும், அந்த வெற்றியைத் தந்த தமிழக வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்ற நன்றி அறிவிப்பு மாநாடு இதே மைதானத்தில்தான் நடைபெற்றது.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் 2023ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 70ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் அந்தக் கூட்டத்தில் பரூக் அப்துல்லா, அகிலேஷ் யாதவ், லல்லுபிரசாத் அவர்களின் மகன் போன்றவர் தேசியத் தலைவர்கள் பங்கேற்ற பிரம்மாண்டமான நிகழ்ச்சியும் இந்த மைதானத்தில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரை இந்தியா முழுமைக்கும் மிகப் பெரிய அளவிலான பொதுமக்களிடையே நன்மதிப்பைப் பெற்றிருக்கிற இந்தியாக் கூட்டணியின் வெற்றியின் கால்கோல் விழாவாகவே அந்த நிகழ்ச்சி இந்த ஒய். எம்.சி.ஏ., மைதானத்தில்தான் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்து அதே ஆண்டில் மரியாதைக்குரிய காங்கிரஸ் பேரியக்கத்தின் மேனாள் தலைவர் அன்னை சோனியாகாந்தி மற்றும் பிரியங்கா காந்தி உள்ளிட்ட தேசிய தலைவர்களைக் கொண்ட மகளிர் மாநாடு ஒன்றும் இந்த மைதானத்தில் அந்த மாநாடும் நடைபெற்று முடிந்திருக்கிறது. இப்படி இந்த ஒய்.எம்.சி.ஏ., மைதானத்தில் வரலாற்று சிறப்புமிக்க, வரலாற்றில் நிலைத்து நிற்கக்கூடிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு மிகப்பெரிய அளவிலான வெற்றியைப் பெற்றிருக்கிறது.



அந்த வகையில் இன்றைக்கு 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை எதிர்நோக்கி நகர்வுகள் போய்க் கொண்டிருக்கிற வேளையில், தி.மு.க. முப்பெரும் விழா இதே மைதானத்தில் நடைபெற உள்ளது. முதலமைச்சர் அவர்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றியைக் காணுவோம் என்று சொல்லி அயராது உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய செயல் திட்டங்களுக்கு வடிவம் கொடுக்கிற வகையிலும், அவருடைய எண்ணத்தை ஈடேற்றும் வகையிலும், இந்த முப்பெரும் விழா மிகப் பெரிய வெற்றியை பெற இருக்கிறது.

இந்த முப்பெரும் விழாவின் மாநாட்டு பந்தல் என்பது, இது வரை அமைக்கப்பட்டது இல்லை என்கிற வகையில் பிரம்மாண்டமான பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது. இதுவரை இங்கு நடத்திய நிகழ்ச்சிகளைக் காட்டிலும், ஒன்றரை மடங்குக் கூடுதல் அளவிலான பந்தலும், இருக்கைகளும் அமைக்கப்பட இருக்கிறது. அறுபத்து ஐந்தாயிரம் இருக்கைகள் அமைக்கப்படவும், சற்றொப்ப ஒரு லட்சம் பேர் பங்கேற்கும் வகையிலான ஓர் எழுச்சி மிகுந்த நிகழ்ச்சியாக இது நடைபெற உள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில மாநாட்டிற்குரிய பல்வேறு சிறப்புகள், இந்த முப்பெரும் விழா நிகழ்ச்சியில் நடைபெற உள்ளது. மைதானத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பவளவிழாவைக் குறிக்கிற வகையில் 75 அடி உயர இருவண்ணக் கொடி பட்டொளி வீசி பறக்கவிருக்கிறது. இதோடு சேர்த்து 50 அடி, 60 அடி உயரக் கொடிக் கம்பங்கள் இந்த மைதானத்தைச் சுற்றி இரு மருங்கிலும் அமைக்கப்பட இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 75 ஆண்டு கால சிறப்புகள், சாதனைகள், செயல்திட்டங்கள் வண்ணப் வண்ணப் பதாகைகளாக இந்த மைதானத்தைச் சுற்றி பொருட்காட்சிப் போல், கண்காட்சித் திடலைப் போல் இந்த மைதானமே மாற இருக்கிறது. வருபவர்களுடைய வாகனங்கள் நிறுத்துவதற்கு ராணுவத்திற்குச் சொந்தமான மைதானத்திலும், ஒய். எம்.சி.ஏ., மைதானத்தில் இருக்கிற மற்றொரு மைதானமும், ஸ்பிக் மைதானமும், நந்தனம் கலைக்கல்லூரி மைதானமும், தாடண்டர் நகர் விளையாட்டு மைதானமும் வாகன நிறுத்தத்திற்காகப் பயன்பட இருக்கிறது. ஆக, இந்தக் கூட்டத்தைப் பொறுத்தவரை ஒரு மிகப்பெரிய அளவில் Artificial Intelligence என்கிற வகையில் இந்த தொழில்நுட்ப வசதிகளும்கூட இதில் பயன்படுத்த இருக்கிறது.

நிச்சயம் இந்த மாநாடு, இன்னுமோர் நூற்றாண்டுக்கும் பேசப்படுகிற பவள விழா மாநாடாக இருக்கும் என்கிற வகையில் இந்த மாநாட்டின் ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தென்சென்னை மாவட்டத்தில் இருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், பகுதிக் கழகங்களின் செயலாளர்கள், ஒன்றியக் கழகங்களின் செயலாளர்கள், கிளைக் கழகங்களின் செயலாளர்கள் அனைத்துத் தரப்பு கழக முன்னோடிகளும், இயக்கத்தின் செயல்வீரர்களும், மிகச் சிறப்பாக இந்த நிகழ்ச்சியின் வெற்றிக்குக் கட்டியம் கூறுகிற வகையில், உழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் நந்தனம் ஒய். எம்.சி.ஏ மைதானத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.



திருவள்ளூர் மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி. மகளிர் மேல்நிலைப்பள்ளியில் ஹைடெக் தொகுதி. கும்முடிப்பூண்டிய மகளிர் அரசினர் கார்பன் நிறுவனத்தின் மூலமாக சி.எஸ்.ஆர் நிதி 14.57 லட்சத்தில் மாணவிகள் பயன்பெறும் வகையில் சுகாதார கட்டித்தை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பனருமான டி.ஜெ.கோவிந்தராஜன் திறந்து வைத்தார். உடன் மு.மணிபாலன், இரா.அறிவழகன், இரா.ரமேஷ், எம்.கேசவன், ஜெயசந்திரன், அப்துல்கரீம், நாகமணி, காளிதாஸ், அர்ஜீனன், பொன்சாந்தி, சி.கருணாகரன், அப்துல் மஜீத் சீனிவாசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் ஹைடெக் கார்பன் நிர்வாக அதிகாரிகள், பள்ளியின் தலைமை ஆசிரியை மற்றும் ஆசிரியைகள் பங்கேற்றனர்.

### சோழவரம் வடக்கு ஒன்றியம்–

# மாலிவாக்கம் ஊராட்சியில் - இல்லந்தோறும் கழகக் கொடியேற்றல்!

## வழுதிகை நா. செல்வசேகரன் ஆலோசனை

திருவள்ளூர், செப். 13-

சோழவரம் வடக்கு ஒன்றியம், மாலிவாக்கம் ஊராட்சிக்குட்பட்ட கிளைகள் தோறும் இல்லங்களில் கழகக் கோடியேற்றுவது குறித்து ஒன்றியச் செயலாளர் வழுதிகை நா. செல்வசேகரன் கிளை கழகச் செயலாளர்களுடன் ஆலோசனை வழங்கினார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், சோழவரம் வடக்கு ஒன்றிய பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் மாவட்ட செயலாளர் டி.ஜே. கோவிந்தராஜன், எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி சோழவரம் வடக்கு ஒன்றிய செயலாளர் வழுதிகை நா. செல்வ சேகரன் மாலி வாக்கம் ஊராட்சிக்குட்பட்ட மாலிவாக்கம், கெங்கையாடி குப்பம், மாலிவாக்கம் காலனி, குதிரை பள்ளம், ஏழுமலையான் கண்டிகை ,புத்தகரம், கிளை ஊர்களில் கொடிக் கம்பங்கள் புதுப்பித்தல் மற்றும் இல்லம்தோறும் இரு வண்ணக் கொடி ஏற்றுதல், முப்பெரும் நிகழ்ச்சிகள் குறித்து கிளைக் கழக செயலாளர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இதில் கழக முன்னோடிகளும் நிர்வாகிகளும் கிளைக் கழக செயலாளர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் மேற்கு பகுதி 48வது வட்டத்தில் பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார் பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ் முன்னிலையில் வட்ட செயலாளர் இரா.பாலன் தலைமையில் தொகுதி பொறுப்பாளர் என்.நவீன் தலைமை செயற்குழு உறுப்பினர் ந.மனோகரன் இரா செந்தில்குமார் எஸ்.ஆர்.கமலக்கண்ணன் க.நாகமம்மை மாமன்ற உறுப்பினர் விஜயலட்சுமி விஜயகுமார் கு.ரமேஷ் எஸ்.ரமேஷ். ரெயின்போ என். விஜயகுமார் எம்.கே.இஸ்மாயில் எஸ்.திருஞானம் இரா பொன்முடி எஸ்.யுவராஜ் ஆர்.வி.லட்சுமி வேலு கோ.நித்தியானந்தம் என்.ஷயத்பாஷா எஸ்.தங்கவாசுகி என்.சிவகுமார். பல்சர் பி.பாலாஜி டபில்யூ. ரவிச்சந்திரன் சி.சின்னராஜ் பாபா ஜி சீனிவாசன் கே.குணசேகரன் வி.சுந்தரி க.சாமுண்டீஸ்வரி மற்றும்பாகமுகவர்கள் கழக மூத்த முன்னோர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்